NEW SCIENCE ACADEMY
யாழ்ப்பாணம்
" மின்னியல் "
By
Mr. மணியம்
சனி, ஞாயிறு 2-30 — 3-30
ஆரம்பம்
16-08-86

Registered as a Newspaper

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ. 1/-

NEW SCIENCE ACADEMY
(B. M. C.க்கு முன்)
யாழ்ப்பாணம்
87 A|L
தாவரவியல்
அலகு 8
(இயங்கும் தாவரம்)
PHYSIOLOGY
சனி, ஞாயிறு 10-30—11-30

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆடி மீ 30 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 8 (15-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 231

## தமிழ்மொழிப் பிராந்தியத்துக்கு அரசிடம் புதிதாக ஒரு மாற்றுத்திட்டம்

### அரசு--கூட்டணிப் பேச்சுவார்த்தை இன்று மாலை ஆரம்பமாகிறது

கொழும்பு, ஆகஸ்ட் 15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தமிழ்மொழிப் பிராந்தியக் கோரிக்கைக்கு இலங்கை அரசு புதிதாக மாற்றுத் திட்டம் ஒன்றைத் தயாரித்துள்ளது.

இன்று ஆரம்பமாகும் இரண்டாம் கட்டப் பேச்சுக்களின் போது அரசு அந்த மாற்றுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கும்.

இப்படி கொழும்பில் அரசு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அந்த மாற்றுத் திட்டம் என்ன என்பது பற்றி தெரிவிக்க அந்த வட்டாரங்கள் மறுத்து விட்டன.

இதே வேளை—

அரசு — கூட்டணிப் பேச்சுக்கள் ஒரு நாள் முன்னதாகவே இன்று ஆரம்பமாகும்.

முந்திய ஏற்பாட்டின் பிரகாரம் இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாக இருந்தது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு பண்டாரநாயக்கா அரசு—கூட்டணிப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் அரசுக் குழுவிற்கு ஜனாதிபதி ஜெயவர்த்தனா தலைமை வகிப்பார்.

கூட்டணிக் குழுவுக்கு திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை வகிப்பார்.

பேச்சுக்கள் ஒரு நாள் முன்னதாகவே ஆரம்பமாகும் என்ற விஷயம் கொழும்பு வந்திறங்கிய தும் விமான நிலையத்தில் வைத்துத்தான் தனக்குத் தெரியும் என்று (4 ஆம் பக்கம் பார்க்க)

### அவர்கள் பேசியது என்ன?

டாக்கா, ஆக 14

'சார்க்' மாநாட்டுக்குச் சென்று இருந்த சமயம் இலங்கை அமைச்சர் சாஹுல் ஹமீதுவும் இந்திய அமைச்சர் சிவ்சங்கரும் உதவியாட்கள் இன்றி சுமார் 45 நிமிடங்கள் வரையில் தனிமையில் பேச்சுக்கள் நடத்தினர்.

இலங்கை இனப்பிரச்சினை குறித்து பேசியிருக்கலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. (இ - ஐ - எ)

### புலிகள் அறிக்கை

## 6 இராணுவத்தினர் பலி!

### 'கனென் சார்ஜ்' தாக்குதல்

யாழ்ப்பாணம், ஆக. 15

நேற்றுக் காலை 7 மணியளவில் மொறவெவ இராணுவ முகாமிலிருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் நடைபவனியாக புறப்பட்டு கோமரங்கடவை நோக்கி சென்று கொண்டிருந்த வேளையில் நாம் புதிய ரக "கனென் சார்ஜ்" இனை வெடிக்கச் செய்து தாக்கியதில் 6 இராணுவத்தினர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மற்றும் பலர் படுகாயமடைந்தனர். இப்படி புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நிலைகொண்டு எதிர்த்தாக்குதல் புரிய இயலாத இராணுவத்தினர் தமது இழப்புக்களுடன் பின்வாங்கி முகாமை அடைந்தனர்.

இத்தாக்குதலின்போது எமது தரப்பில் சேதம் எதுவும் இல்லை. இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

## கல்முனையில் மேலும் 2 சடலங்கள் ஒதுங்கின

கல்முனை, ஆக. 15

மருதமுனைக் கடற்கரையிலும் பெரியநீலாவணைக் கடற்கரையிலும் இரண்டு தமிழரின் சடலங்கள் நேற்று ஒதுங்கின.

மருதமுனையில் ஒதுங்கிய சடலத்தை அப்பகுதி முஸ்லிம் மக்கள் அடக்கஞ் செய்துவிட்டனர்.

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வாடியொன்றில் வேலைசெய்ய வந்த தமிழ்த் தொழிலாளர்களே கலவரத்தின்போது கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர் என்று கூறப்படுகிறது. (உ-எ-84)

## அரச அதிபரைச் சந்திக்கச் சென்ற கிராமத்தலைவர் கைது!

திருகோணமலை, ஆக. 15

திருமலை அரச அதிபரைச் சந்திக்கச் சென்ற கட்டைபறிச்சான் கிராமோதய சபைத் தலைவர் திரு. உதயகுமார், திருமலைக் கச்சேரியில் வைத்து ஆயுதப்படையினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார்.

மூதூரில் உள்ள தமிழ் அகதிகளுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக இன்னொரு கிராமோதய சபைத் தலைவரான திரு வை. கைலாயபிள்ளை சகிதம் சென்ற சமயமே ஆயுதப்படையினரால் உதயகுமார் கைது செய்யப்பட்டார்.

திரு. கைலாயபிள்ளை இச் சம்பந்தமாக உடனே அரச அதிபர் திரு. டி. எம். ஆயோர்த்திடம் முறையிட்டார். (உ எ-150)

### பல்கலைக்கழக மாணவரின்

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக 15

யாழ் பல்கலைக் கழக மாணவரின் நேற்றைய தொடரான உண்ணாவிரதம் சிறிது நேரத்தின் பின்னர் கைவிடப்பட்டது.

ஆனால் நடவடிக்கைக் குழுவால் நிர்வாகத்தின் முன் வைக்கப்பட்ட சகல கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்வரை பகிஷ்கரிப்பு போராட்டம் நடைபெறும் என்று மாணவர் நடவடிக்கைக் குழு தெரிவித்தது.

நேற்று உண்ணாவிரதத்திலீடுபட்டிருந்த மாணவர்களை பதில் துணைவேந்தர் கலாநிதி பாலகிருஷ்ணன் சந்தித்துப் பேசியதைத் (4-ஆம் பக்கம் பார்க்க)

## பகிஷ்கரிப்பு தொடரும்; மறியல் இடை நிறுத்தம்

### மாணவர் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 15

யாழ் பல்கலைக்கழக மாணவர் நடத்தி வரும் மறியல் போராட்டம் இடைநிறுத்தப்படும். ஆனால் பகிஷ்கரிப்புத் தொடர்ந்து நடைபெறும்.

இப்படிப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்து வரும் சம்பவங்கள் தொடர்பாகவும் கடந்த 7ஆம் திகதி தொடக்கம் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வரும் எமது நியாயமான கோரிக்கைகளுக்கான போராட்டம் தொடர்பாகவும் நாம் இறுதியாக எடுத்திருக்கும் நிலைப்பாட்டினை இங்கு தெளிவுபடுத்துகின்றோம்.

பல்கலைக்கழக மாணவர் என்ற ரீதியில் பல்கலைக்கழகத்துக்கென நிர்வாகம் இருக்கக் கூடியதாக அந்த நிர்வாகத் (4ஆம் பக்கம் பார்க்க)

## முட்டுக்கட்டை போடும் அம்சங்கள்

கொழும்பு, ஆக. 15

காணி, சட்டம், ஒழுங்கு, ஆளுநர் அதிகாரம் ஆகியவற்றில் முட்டுக்கட்டையாக உள்ள முக்கிய அம்சங்களும் இன்று ஆரம்பமாகும் அரசு — கூட்டணிப் பேச்சுக்களின் போது ஆராயப்படும் என்று தெரிகிறது.

அவையாவன!

### காணி உரிமை

மாகாண எல்லைக்குள் இருக்கும் முழுக் காணியும் அந்த மாகாண சபைக்கே பரதீனப்படுத்தப்படவேண்டும் என்று கூட்டணி வலியுறுத்துகின்றது.

இதற்கு ஆதாரமாக தற்சமயம் மாநகர சபைகள், உள்ளூராட்சிச் சபைகளுக்கு அவற்றின் எல்லைக்குள் இருக்கும் காணிகளை பராதீனப்படுத்தப்பட்டுள்ளதை கூட்டணி சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசோ, மாகாணசபைக்குள் வரும் காணிகள் மத்திய அரசின் பொறுப்பிலேதான் இருக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

### சட்டம் - ஒழுங்கு

பிரதிப்பொலீஸ் மாஅதிபர், மாகாண சபை முதலமைச்சருக்குப் பொறுப்பாக இருக்க வேண்டும் என்று கூட்டணி வற்புறுத்துகிறது.

பொலீஸ் மாஅதிபரின் பொறுப்பின் கீழ் பிரதிபொலீஸ் மாஅதிபர் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் கூறுகிறது.

### அதிகாரப் பகிர்வு

ஆளுநருக்கு நிறைவேற்று அதிகாரம் வழங்கப்படக் கூடாது; ஆளுநர், சம்பிரதாய பூர்வமான அரசுப் பிரதிநிதியாக மட்டுமே இருக்கவேண்டும் நிறைவேற்று அதிகாரங்கள் முதலமைச்சருக்கு வழங்கப்பட வேண்டும்

இப்படி கூட்டணி வற்புறுத்துகிறது. ஆனால் அரசாங்கமோ நிறைவேற்று அதிகாரங்கள் ஆளுநருக்கு வழங்கப்படும் என்று வலியுறுத்துகிறது.

### அதிகாரப் பகிர்வு - பிரிவு

அதிகாரப்பகிர்வு, தமிழ் மொழி பிராந்தியம் என்ற அமைப்பின் கீழ் வழங்கப்பட வேண்டும் என்று கூட்டணி வற்புறுத்துகிறது.

அரசாங்கமோ அதிகாரப்பகிர்வு மாகாணசபை மட்டத்தில் தான் இருக்கும் என்று வற்புறுத்துகிறது.

மேற்கண்ட, முட்டுக்கட்டையாக உள்ள முக்கிய அம்சங்கள் குறித்துத் தான் அரசு-கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் இடம்பெறும் (அ-எ)

## மிகிந்தலையில் தமிழர் மூவர் உயிரோடு எரிப்பு

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 15

வவுனியாவில் இருந்து லொறி ஒன்றில் கொழும்பு சென்ற மூன்று தமிழர்கள் உயிருடன் லொறியில் வைத்து எரிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு எட்டு மணி அளவில் மிகிந்தலைக்கு அருகாமையில் உள்ள கற்குளம் என்ற இடத்தில் நடந்தது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:

நேற்று முன்தினம் வவுனியாவில் இருந்து லொறிப் போக்குவரத்து ஏஜன்சி ஒன்றுக்குச் சொந்தமான லொறி ஒன்று மிளகாய், நெல் ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

லொறியில் சாரதி கிளீனர் ஆகியோருடன் போக்குவரத்து ஏஜன்சி உரிமையாளரின் மகனும் சென்று கொண்டிருந்தனர்.

இரவு எட்டுமணி அளவில் லொறி மிகிந்தலைக்கு அருகாமையில் உள்ள கற்குளம் என்ற இடத்தில் சென்றுகொண்டிரு (4-ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



உயிரோடை எரிக்கத் தொடங்கிவிட்டினம். திரும்ப ஒரு 83 ஜூலைக்கு ஆயத்தம் செய்யினமோ? பின்னை.. !

## இராணுவத்துக்கு மேலும் 2,000 பேர்

கொழும்பு, ஆக 15

இராணுவத்துக்கு மேலும் 2,000 சிப்பாய்கள் திரட்டப்படவுள்ளனர்.

இம்மாதம் இதற்கான நேர்முகப்பரீட்சைகள் மாத்தறை, காலி, கொழும்பு, களுத்துறை, அம்பாறை, நுவரெலியா மாவட்டங்களில் இடம் பெறும்.

தெரிவு செய்யப்படும் சிப்பாய்களுக்கு மாதுறு ஓயா, மின்னேரியா, தியத்தலாவ பயிற்சி முகாம்களில் பயிற்சி அளிக்கப்படும். (இ - ஐ - எ)

## தமிழ் மொழிப் பிராந்தியத்தை மக்களும் வலியுறுத்துகின்றனர்

### இந்தியாவிடம் கூறிவிட்டதாக அமிர் தகவல்

கொழும்பு, ஆக. 15

தமிழ்மொழிப் பிராந்தியக் கோரிக்கையைக் கூட்டணி, போராளிகள் மட்டுமல்ல இலங்கைத் தமிழர் அனைவருமே வலியுறுத்தி வருகின்றனர் என்பதை இந்திய அரசுக்கு தெட்டத்தெளிவாகக் கூறிவிட்டோம்.

இப்படிக் கொழும்பு வந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் உதயனுக்கு நேற்று அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

பேட்டி விபரம் வருமாறு!

கேள்வி; இனப்பிரச்சினையின் பேச்சுக்கள் குழம்புவதை இந்தியா விரும்பவில்லை என்று கூறப்படுகின்றது. அதுபற்றி உங்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

அமிர்; இந்தியா அப்படி எதுவும் கூறவில்லை. தமிழ்மொழிப் பிராந்தியக் கோரிக்கை பற்றி எமது நிலையை இந்திய அரசுக்குத் தெளிவுபடுத்தி விட்டோம்.

கூட்டணி, போராளி அமைப்புகள் மட்டும் தமிழ் மொழி பிராந்தியக் கோரிக்கையை வலியுறுத்தவில்லை; இலங்கையில் தமிழினமே அக் (4-ஆம் பக்கம் பார்க்க)

## வல்வெட்டித்துறையில் இராணுவ வீரர் பலி!

வல்வெட்டித்துறை, ஆக 15

வல்வெட்டித்துறையில் நேற்று நடைபெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் காவலுக்கு நின்ற சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

இச்சம்பவத்தை அடுத்து ஹெலிக்கொப்டர் தாக்குதலும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றன.

சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு!

நேற்றுக்காலை பத்து மணியளவில் வல்வை இராணுவ முகாமின் பிரதான காவல் அரணில் காவல் புரிந்துகொண்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் மீது நாம் குறி பார்த்துச் சுட்டதில் அவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

புதன்கிழமை பின்நேரம் வல்வை இராணுவமுகாமில் இருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் எமது வீரரொருவர் காயமடைந்தார். பின்பு நாம் நேற்று அதிகாலையளவில் இராணுவ முகாம்மீது மோட்டார் ஷெல் தாக்குதல் மேற்கொண்டோம். சேத விபரம் எதும் தெரியவில்லை — இப்படி இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-வி)

### சுபநேரம்

15—08—1986
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
6.05 முதல் 7.35 வரை
ராகுகாலம்:.
10.35 முதல் 12.05 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
வரலக்ஷ்மி விரதம்

### படகு அகதிகள்: ஒருவருடம் தங்க அனுமதி

## சரக்குப்பெட்டிக்குள் இருத்தி எதையும் பார்க்கவிடாது மூடினர்

### இந்தியாவிலிருந்து சென்றதாகத் தகவல்

ஒட்டாவா, ஆக. 14

கப்பலில் சரக்குப்பெட்டிக்குள் எம்மை இருக்கச்செய்து எதையும் பார்க்க விடாது அதனை மூடிவிட்டனர்.

அத்திலாந்திக் கடலில் தத்தளித்தபோது காப்பாற்றப்பட்டு கனடாவுக்குக் கொண்டுசெல்லப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் ஒருவர் தமது அனுபவத்தை இப்படிக் கூறினார்.

காப்பாற்றப்பட்ட இலங்கைத் தமிழ் அகதிகள் 132 பேர் நேற்று மொன்றீல் நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

20பேர் ரொறன்டோ நகருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் கனடாவில் ஒரு ஆண்டுக்குக் குறையாமல் தங்கலாம் என்று கனடா அரசு அனுமதித்துள்ளது.

தமிழ் அகதிகளை அத்திலாந்திக் கடலில் இறக்கிவிட்ட கப்பல் சிறு அல்லது கொரிய நாட்டைச் சேர்ந்ததாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது

அகதிகளில் ஒருவரான தம்பையா விஜயநாதன் (வயது 46) என்பவர் ரொய்டர் செய்தி ஸ்தாபனத்திடம் தமது அனுபவத்தைத் தெரிவித்தார்.

"யாழ்ப்பாணத்தில் ஹோட்டல் ஒன்றில் (4-ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வெடிக்கும் நிலையில் இருந்த மின்மாற்றி தகுந்த நேரத்தில் காப்பாற்றப்பட்டது

பலாலி, ஆக 15

மிக்கூடிய மின்னோட்டத்தை தாங்க முடியாது வெடிக்கும் நிலையிலிருந்த டிரான்ஸ்போமர் (மின்மாற்றி) தகுந்த நேரத்தில் காப்பாற்றப்பட்டது.

சட்டவிரோதமாக மின் இணைப்பை ஏற்படுத்தியிருந்த சுமார் 200பேரின் மின்வயர்கள் துண்டிக்கப்பட்டு அச்சுவேலி பன் நிலையத்தில் வைத்து எரிக்கப்பட்டன.

அச்சுவேலிப்பகுதி மின் அத்தியேட்சகர் தலைமையில் மின்சாரப் பகுதி ஊழியர்களும், இளைஞர் இயக்கங்களின் பிரதிநிதிகளும் இணைந்து சட்டவிரோத மின் இணைப்பைத் துண்டித்தனர்.

சட்டவிரோதமாக சிலர் செய்யும் செய்கைகளால் அச்சுவேலிப்பகுதியில் சட்டபூர்வமாக மின் இணைப்பைப் பெற்றுள்ள சுமார் 1500பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மின் இணைப்பு ஏற்படுத்துவோர் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று இளைஞர் இயக்கங்கள் எச்சரித்துள்ளனர்.

பகலில் மட்டுமன்றி இரவிலும் இவற்றைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக்குழு தெரிவு செய்யப் பட்டதெனவும் கண்டுபிடிக்கப்படும் சட்டவிரோத மின் இணைப்பாளர்களிடம் பெறப்படும் தண்டப் பணம் பொதுநல தாபனங்களுக்கு வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-119)


விரையுங்கள்!

பரிசு வெல்லுங்கள்!!

உதயன் - சஞ்சீவி

நல்லூர் உற்சவகால

### அறிவுப் போட்டி

1. இப்போட்டியில் உதயன் - சஞ்சீவி வாசகர்கள் எவரும் பங்குபற்றலாம்
2. கீழே காணப்படும் விஞப் படிவத்தைப் பூர்த்திசெய்து, நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டிக்குள் இடவேண்டும்.
3. போட்டி முடிவு திகதி: 01-09-1986
4. சரியான விடைகள் எழுதியவர்களின் படிவங்கள் தெரிவுசெய்யப்பட்டு, தீர்த்தோற்சவமான 03-09-86 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆதீனத்தில் வைத்து அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு அங்கு வைத்தே உடன் பரிசுகள் வழங்கப்படும்.
5. பரிசுகள்; வெகுமதிமிக்க 5 பரிசுகளும், ஆறுதல் பரிசுகளும் உண்டு
6. போட்டியாளர் பெயர்:

முகவரி:

கையொப்பம்:

7. வினப்படிவம்

அ) தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களின் அட்டவணை ஒன்றினைத் தமது உபயோகத்திற்கு எழுதிய வெளிநாட்டவர் யார்?

____________________

ஆ) "கோலமர கதமஞ்சை வாகன வடிவமென் குறைதவிர்த் தாண்டருள்வாய்" — என்று நல்லூர் முருகப்பெருமானைப் பாடியவர் பெயரைக் கூறுக?

____________________

இ) நல்லூர்க் கோயிலில் நடைபெறும் அர்த்தசாமப் பூசையை பலமுறை கண்டு மனமுருகி வழிபட்டு அப்பூசையைப் பற்றி எழுதியவர் யார்?

____________________

ஈ) நல்லூரான் தேரடியில் தனது குருவைக் கண்டு அருள்பெற்ற ஞானியின் பெயரைக் கூறுக?

____________________

உ) நல்லூர் முருகனை "பேறுபெற்ற பிணிமுக ஊர்தியில் ஏறு சேவகன்" என்று பாடியவர் யார்?

____________________

ஊ) தண்டாயுதபாணி கோயில், நல்லூர் ஆலயத்தில் எங்கே அமைந்துள்ளது?

____________________

எ) நல்லைக் குறவஞ்சி யாரால் பாடப்பெற்றது?

____________________

ஏ) நல்லூரானின் தற்போதைய சித்திரத்தேரை உருவாக்கிய சிற்பாச்சாரியாரின் பெயர் என்ன?

____________________

ஐ) நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெறும் கார்த்திகைத் திருவிழாவை நயந்து பாடியவர் யார்?

____________________

ஒ) நல்லூர் கோயிலில் "கட்டியம்" கூறப்படும் போது யாருடைய பெயர் பிரதான இடம் பெறுகின்றது?

____________________


## மண்டைதீவில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

### கால் நடைகள் இறக்கின்றன

மண்டைதீவு, ஆக.15

மண்டைதீவுப் பகுதியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறிப்பாக கரைபோரப் பகுதி மீனவர்கள் குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதி மக்களின் உயிர்நாடியாக விளங்கும் குடி தண்ணீர்க் கிணறுகள் தற்பொழுது ஏற்பட்டுள்ள கடும் வரட்சியால் வற்றிவிட்டன.

கடந்த வருடம் சமூகசேவை பகுதியினர் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்காக வேலணை சாட்டியிலிருந்து டிராக்டர்கள் மூலம் குடிதண்ணீரை இலவசமாக வழங்கி வந்தனர்.

ஆனால் இவ்வருடம் இதுவரை குடிதண்ணீர் வழங்குவதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

இது குறித்து இப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

கால் நடைகளும் குடிதண்ணீர் இல்லாது இறக்க ஆரம்பித்து விட்டன. (இ-88)

துர்க்காதேவி தேவஸ்தானத்தால்

## நாதஸ்வர, தவில் பயிற்சிப் பாடசாலை

காங்கேசன்துறை, ஆக.15

நாதஸ்வர தவில் கலைகளின் வளர்ச்சிக்காக அரசின் உதவியுடன் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தால் பயிற்சிப்பாடசாலை ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

நாதஸ்வர தவில் கலைகளில் பயிற்சி அளிப்பது சம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் ஒன்று தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்றது.

யாழ் உதவி அரசாங்க அதிபர் திரு பாலசிங்கம், வலி-வடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி வமதிவி சோமசுந்தரம் உட்பட நாதஸ்வர தவில் கலைஞர்களும் கலந்து கொண்டனர்.

அரசின் உதவியுடன் நாதஸ்வர, தவில் கலைகளுக்கு பயிற்சி வகுப்பு நடத்துவதன் அவசியம் குறித்து யாழ்-அரச அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் வலியுறுத்திக் கூறினார்.

மேற்படி பயிற்சிப்பாடசாலையை எதிர்வரும் விஜய தசமியன்று ஆரம்பிப்பதெனவும், இதற்கு தேவையான கருவிகளை வாங்குவதெனவும், பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு மாதாந்த அலவன்ஸ் வழங்குவதெனவும், காலக்கிரமத்தில் இந்தியாவில் இருந்து இருகலைகளுக்கும் ஒருவர் வீதம் பயிற்சியாளர்களை வரவழைப்பதெனவும், இப்பயிற்சியில் சிறந்து விளங்கும் மாணவர்களை இந்தியாவுக்கு அனுப்பி பயிற்சி அளிப்பதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ-68)

## செய்திக் கொத்து

### குருகுல இல்லத்தில் அலுவலகம்

கிளிநொச்சி, ஆக 15

கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் அலுவலகம், கிளிநொச்சி அத்தியாவசிய சேவைகள் குழு அலுவலகம் ஆகியன கிளி குருகுல இல்லத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.

பொதுமக்கள் இங்கு சென்று தமது அலுவல்களைக் கவனிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-76)

### இணக்க சபைத் தலைவர் ராஜினாமா

சாவகச்சேரி, ஆக 15

மடடுவில் தெற்கு-நுணாவில் கிராமசேவகர் பிரிவிற்கான இணக்க சபையின் தலைவர் பண்டிதர் செ. சிவலிங்கம் தமது தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

உபதலைவர் திரு. வெற்றிவேலுவும் இராஜினாமாச் செய்துள்ளார். (இ-31)

### மூக்குக் கண்ணாடி

காங்கேசன்துறை, ஆக 15

மேற்கு ஜெர்மன் வையின்ஸ் கழகத்தால் மாவிட்டபுரம் லயன்ஸ் கழகத்துக்கு அன்பளிப்பாகக் கிடைத்த மூக்குக்கண்ணாடிகள் வறிய மக்களுக்கு வழங்கப்பட்டன. (இ-68)

### ரூ. 15 லட்சம் ஒதுக்கீடு

தாவடி, ஆக.15

வீதிகள், கட்டடங்கள் அமைப்பதற்காக அடுத்த ஆண்டு மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் தேர்தல் தொகுதிகள் தோறும் 15 லட்சம் ரூபா ஒதுக்க யாழ் மாவட்ட உள்ளுராட்சித் திணைக்களம் தீர்மானித்துள்ளது. (இ-144)

### அன்பளிப்பு

கைதடி, ஆக 15

கைதடி வெளிக்கள நிலையத்தில் தங்கியிருக்கும் கிளிநொச்சியைச் சேர்ந்த 25 அகதிக் குடும்பத்தினருக்கு கைதடி சேகர் கல்வி நிலைய மாணவர்கள் உடுபுடவை, உணவுப் பொருளை சேகரித்து அன்பளிப்புச் செய்தனர். (இ74)

### அகதிகளுக்கு பாலர் பாடசாலை

கரவெட்டி, ஆக 15

அகதிகள் குழந்தைகளுக்கு இலவச பாலர் பாடசாலை ஒன்று நிறுவப்படவுள்ளது.

கரவெட்டி புதுத்தோட்டம் என்னும் பகுதியில் இது அமைந்துள்ளது. (இ-70)

## தமிழ் - முஸ்லிம் சமாதானக் குழு

### கல்முனையில் அங்குரார்ப்பணம்

கல்முனை, ஆக 15

கல்முனைக் கலவரத்தைத் தணிக்கவும் இரு சமூகங்களுக்கு இடையில் நல்லுறவை வளர்க்கவும் தமிழ், முஸ்லிம்கள் அடங்கிய சமாதான சபை ஒன்று நியமிக்கப்பட்டது.

முன்னை போலீஸ் நிலையத்தில் வைத்து இச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் நடந்தது.

சபையில் ஏழு தமிழரும் ஏழு முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டனர்.

சபையின் சார்பில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டன.

கடத்தப்பட்டவர்கள் எதுவித துன்புறுத்தலும் இன்றி விடுவிக்கப்பட வேண்டும். மூடப்பட்ட வர்த்தக நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்களே பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டன. (இ-எ-84)

## ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 15

சகல அரசாங்க ஆசிரியர்களுக்கும் இவ்வருடம் விசேஷ சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ள ஓர் சுற்று நிருபத்தில் கூறியுள்ளது.

ஆசிரியர்களின் சம்பளம் மீளாய்வு செய்யப்பட்டு ஏழ்மையான கருடாந்த சம்பள உயர்வுக்கு சமமான இரட்டிப்புத் தொகை வழங்கப்படும் என்றும், 1-1-86 தொடக்கம் இவ்வுயர்வின் நிலுவைகள் கொடுக்கப்படும் என்றும் அச்சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

இச்சம்பள உயர்வு அரசின் சகல உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாகவும் அறியப்படுகிறது (இ-5)

## வடபகுதியில் மீண்டும் பட்டுப்பூச்சி வளர்ப்பு

யாழ்ப்பாணம், ஆக 15

பட்டுப்பூச்சி வளர்ப்பு வடபகுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.

தேசிய இளைஞர்சேவைகள் மன்றம் இதபற்றி தெரிவித்துள்ளது

1987 ஆம் ஆண்டு இதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பமாகும்.

யாழ் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் சந்திப்பொன்றிலேயே இதுபற்றி தெரிவிக்கப்பட்டது

முன்னர் அச்சுவேலியில் ஒரு பட்டுப்பூச்சி வளர்ப்பு நிலையம் இருந்தது தொடர்ந்து இயங்க முடியாமையால் பட்டுப்பூச்சி வளர்ப்பு நிறுத்தப்பட்டது.

பட்டுப்பூச்சி முட்டைகள் முன்னர் பல்லேகலையிலிருந்தே வடபகுதிக்கு பெறப்பட்டன.

போக்குவரத்தின் போது அவை பழுதடைந்தன.

இம்முறை பட்டுப்பூச்சி முட்டைகளை யாழ் பல்கலைக்கழகத்தில் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பட்டுச்செடி வளர்ப்புக்காக கிளிநொச்சியில் 25 ஏக்கர் நிலம் அரச அதிபரால் ஒதுக்கப்பட்டுள்ளது.

நூல் எடுத்தல் சம்பந்தமான வேலைகளை யாழ் திட்டமிடல் அமைச்சின் அலுவலகம் பொறுப்பேற்கவுள்ளது

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இவ்வேலைக்கு அரசஅதிபர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் நிதி உதவி செய்வார் என நம்புவதாக வடபிரதேச உதவி இயக்குநர் திரு எ. நாகேந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டம் மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி கே. எஸ். கார்த்திகேயனால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது (இ-5)

### புல்லாங்குழல் அரங்கேற்றம்

பண்டத்தரிப்பு, ஆக 15

அரியாலை மூத்த கலைஞர்களில் ஒருவரான முன்னாள் கிராமசேவகர் திரு க. சண்முகராசாவின் புல்லாங்குழல் அரங்கேற்றம் எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

64 வயதான இவரின் புல்லாங்குழல் அரங்கேற்றம் அரியாலை சித்திவிநாயகர் ஆலயமுன்றலில் தேர்த் திருவிழா வன்று காலை 10 மணி அளவில் நடைபெறும். (இ-120)


எங்கள் சேவை

தேவை

வேப்பம் விதைகள் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்ளவும்: மில்க்வைற், யாழ்ப்பாணம்


## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### மக்கள் முகம்

#### பாதுகாப்பு நிறைவேற்று குழு

கரவெட்டி, ஆக.15

நெல்லியடி பட்டின சபை மூன்றும் வட்டார பாதுகாப்பு நிறைவேற்றுக் குழு அங்குரார்ப்பணக்கூட்டம் கரவெட்டி ஞானசாரியர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இதன் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திரு சி. சிவசம்பு, செயலாளர்; திரு. மு சிற்சபேசன்ராசா பொருளாளர்; திரு. த. நவரத்தினம்

நிர்வாகக்குழு அங்கத்தவர்கள் பத்து பேரும் தெரிவு செய்யப்பட்டனர். (இ-70)

#### நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஆக. 15

சண்டிலிப்பாய் சமாதான சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடந்தது.

பின்வருவோர் நிர்வாக சபை உறுப்பினராக தெரிவாகினார்கள்

தலைவர்: டாக்டர் த. கோபாலசிங்கம், உபதலைவர்கள்: திரு. நாகலிங்கம், திரு க. மழவராயர். செயலாளர். திரு. மு. பரராசசிங்கம் துணைச்செயலாளர் திரு. க. பெரியையா, பொருளாளர் திரு கே. எஸ். [illegible]. (ஒ)

## தனியார் பாடசாலை ஆசிரியரும் "கிராடியூட்டி" பெறத்தகுதி

### உடுவில் ஓய்வு பெற்ற ஆசிரியை மனு மீது தீர்ப்பு

யாழ்ப்பாணம், ஆக. 15

பாடசாலை ஆசிரியர் பென்ஷன் சட்டவிதிகளின் கீழ் பணம் செலுத்தி வரும் தனிப்பட்ட பாடசாலை ஆசிரியர்களும் 1983 ஆம்ஆண்டில் சேவைக்கால பணிக்கொடைச் சட்டத்தின்படி, சேவைக்காலப் பணிக்கொடை (கிராடியூட்டி) பெறத் தகுதியுடையவர்கள்

இப்படி தொழில் ஆணையாளர் தீர்ப்பளித்திருக்கிறார்.

யாழ்ப்பாணம், உடுவில் மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற திருமதி பாலரத்தினம் என்பவர் செய்துகொண்ட மனு மீது தொழில் திணைக்களம் நடத்திய விசாரணையின் முடிவில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

திருமதி பாலரத்தினம் ஆசிரியர் பென்ஷன்சட்டவிதிகளின் கீழ் பென்ஷனுக்குரிய கழிவை சம்பளத்தில் இருந்து கொடுத்து வந்ததாகவும் அதற்கிணங்க சேவைக்காலப் பணிக்கொடை பெற அவருக்கு உரிமையுண்டு என்றும் மனுதாரர் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்டது

பாடசாலை ஆசிரியர் பென்ஷன் சட்டவிதிகளின் கீழ் வரும் தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கு சேவைக்காலப் பணிக்கொடை [illegible] என்று கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் வாதிக்கப்பட்டது.

இரு தரப்பாரினதும் சாட்சியங்களை யாழ் உதவித் தொழில் ஆணையாளர் திரு என். சி இராசநாயகம் பதிவு செய்து தீர்ப்புக்காக தொழில் ஆணையாளருக்கு அனுப்பி வைத்தார்.

தற்போது மனுதாரரான ஓய்வு பெற்ற ஆசிரியைக்குச் சாதகமாக தொழில் ஆணையாளர் தீர்ப்பை அளித்திருக்கிறார்

மனுதாரர் சார்பில் தொழில் சட்ட ஆலோசகர் திரு ஏ புவனேசனும், கல்லூரி நிர்வாகத்தின் சார்பில் நட்டத்தரணி திரு ஞானப்பிரகாசமும் ஆஜராகினர்கள். (இ-5)

### பொதுக்கூட்டம்

சுன்னாகம், ஆக. 15

சுன்னாகம் வர்த்தகர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நாகபூஸ் தியேட்டரில் நடைபெறும். (இ-27)

### செ. கு. கூட்டம்

சுன்னாகம், ஆக 15

நாளை சனிக்கிழமை சுன்னாகம் பிரஜைகள் குழுவின் செயற் குழுக்கூட்டம் தலைவர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையில் தமிழ் மகன் பாடசாலை மண்டபத்தில் பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும். (இ-27)

### புங்குடுதீவில்

'நமது எதிர்காலம்' என்ற தலைப்பில் புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலயத்துக்கு அருகில் உள்ள தெய்வக் குழந்தைகள் இல்லத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் [illegible] மணிக்கு நடைபெறும். (இ-எ)


Computer Programming

WEEKEND CLASSEs

G.C.E. A/L பரீட்சைக்கு இம்முறை தோன்றிய மாணவர்களின் வசதிக்காக விசேஷ வகுப்புகள்.

ஆரம்பம்: 16-8-86 சனிக்கிழமை 8 மணிக்கு

"We never forget you have a choice"

Cantabia Institute

21, Main Street, Jaffna.

T Phone: 24201



தமிழ் மொழி மூலம் ஆங்கிலம் பயில்வோருக்கு அருமையான

ஒரு வாய்ப்பு!

உங்கள் பயிற்சிக்கு மிக உதவியாக வந்துவிட்டது!

LEARNER'S ENGLISH

(லேணர்ஸ் இங்கிலிஷ்)

143 பக்கங்கள் மட்டுமே கொண்ட இந்நூலை ஆங்கிலம் தெரிந்த ஒருவரின் உதவியுடன் நீங்கள் கற்றுத் தேர்ந்தால் போதும் — ஆங்கில மொழி உங்களிடம் வந்துவிடும்!

ஆங்கில மொழியில் பிழையின்றி எழுதவும், வாசிக்கவும், பேசவும் இந்நூலின் உதவியால் உங்களுக்கு நல்ல ஆற்றல் ஏற்படும். இந்நூலிலுள்ள விளக்கக் குறிப்புகள் யாவும் தமிழ் மொழியில் இருப்பதால் தமிழ் மாணவர்களுக்கு இது மிக வாய்ப்பானது.

—இதுபோன்ற நூல் இதுவரை வெளிவந்ததில்லை.

★ இது ஒரு வரதர் வெளியீடு!

விலை ரூபா 16/- இப்பொழுது விற்பனையாகிறது!

நல்லூர் திருவிழா அமைப்பிலுள்ள பூபாலசிங்கம் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

இதயத்தைத் தூய்மையாக்குதல் இன்றியமையாதது. தேசபக்திக்கு முதல்படி இதய சுத்தம்.

—சுவாமி விவேகானந்தர்


# உதயன்

உண்மை — அறிவாண்மை — நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805, 22073
15-08-86 த பெ 23


## யாழ். விவசாயிகளுக்கு ஏன் இந்த நிர்ப்பந்தம்?

உருளைக்கிழங்குச் செய்கைக்குரிய பெரும்போக காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. இம்முறையும் யாழ். மாவட்ட உருளைக்கிழங்குச் செய்கையாளருக்கு உள்நாட்டு விதைகிழங்கே விநியோகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமக்கு இம்முறையும் உள்நாட்டு விதை கிழங்கு கிடைக்க இருப்பது குறித்து, உருளைக் கிழங்குச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலையும் அதிருப்தியும் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்களது அதிருப்தி ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. அதற்குத் தகுந்த காரணங்களும் உள்ளன.

கடந்த மூன்று வருடங்களாக யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு உள்நாட்டு விதை கிழங்கே வழங்கப்பட்டது. அதன் காரணமாக உருளைக்கிழங்கு விளைச்சல் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி அடைந்துவிட்டது. அதனால் விவசாயிகள் பெருநஷ்டமும் அடைந்தனர்.

அதனாலேயே இம்முறையும் உள்நாட்டு விதை கிழங்கு என்றதும் விவசாயிகள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். கிழங்குச் செய்கையில் ஈடுபடவும் பின் நிற்கிறார்கள்.

இதனை அரசாங்கமும், யாழ். மாவட்ட அரச உயர் அதிகாரிகளும் கவனத்தில் கொள்வது அவசியம்.

உருளைக் கிழங்கு மிகப் பரந்த அளவில் பயிரிடப்படும் நுவரெலியாவில், அப்பகுதி விவசாயிகளுக்கு வெளிநாட்டு விதை கிழங்கு விநியோகிக்கப்படது. இம்முறையும் விநியோகிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

அந்தத் தகவல் சரியானால் யாழ்ப்பாண விவசாயிகளுக்கு வெளிநாட்டு விதை கிழங்கு வழங்கப்படுவதுதான் நியாயம்.

வடபகுதியின் பிரபல உப உணவுப் பொருள்கள் வெங்காயம், மிளகாய், உருளைக் கிழங்கு என்ற நிலை ஒரு போது இருந்தது.

அந்த மூன்று உப உணவுப் பயிர்களை விளைவித்ததன் மூலம் வடக்கு விவசாயிகள் நல்ல லாபம் ஈட்டியதும் உண்டு. ஆனால் தாராள இறக்குமதி என்ற போர்வையின் கீழ் வடக்கின் மிளகாய், வெங்காய உற்பத்திக்கு ஓங்கி அடிக்கப்பட்டது. அந்த அடியுடன் கீழே விழுந்த பிரஸ்தாப உப உணவுப் பயிர்ச் செய்கை இன்னமும் "படுத்த படுக்கை"யாகவே கிடக்கிறது.

போக்குவரத்து தடைகளினால் வெங்காயம், மிளகாய் கொழும்புக்குச் செல்லத் தாமதித்ததும் அரசாங்கமும், அமைச்சர்களதும், அவர்களின் ஊதுகுழல் பிரசங்கிகளும் வடபகுதி விவசாயிகளுக்காக நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்.

வெங்காயம், மிளகாய் பயிர்ச்செய்கைக்கு நேர்ந்த அதே கதி கடந்த மூன்று வருடங்களாக உருளைக்கிழங்குச் செய்கைக்கும் ஏற்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தி வீழ்ச்சி அடைந்தமைக்கு ஒவ்வாத விதை கிழங்கே பிரதான காரணம் என்று விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

இத்தகைய ஒரு நிலைமையில் —

நுவரெலியா விவசாயிகளுக்கு நல்லரக வெளிநாட்டு விதை கிழங்கை விநியோகித்துக் கொண்டு, யாழ் விவசாயிகளுக்கு மட்டும் உள்நாட்டு விதை கிழங்கை விநியோகிப்பது ஏன்? தட்டிக் கேட்க எவருமில்லை என்பதாலா?

வடக்கின் வெங்காயம், மிளகாய் பயிர்ச் செய்கைக்குப் போடப்பட்ட அடி போல, உருளைக் கிழங்குச் செய்கைக்குப் போடப்படும் தலைமேல் அடியா இது?

எந்த நேரம் பொம்பரும், ஹெலியும் வந்து குண்டு வீசிப் பயிர்களை நாசமாக்குமோ என்ற பெரும் ஆபத்தோடுதான் — அபாயத்தை எதிர்நோக்கிக் கொண்டு தான் தமிழ் மண்ணில் விவசாயம் மிக மிகக் குறைந்த அளவில் நடக்கிறது.

குறைந்த விளைச்சல் தரும் விதை கிழங்கு என்று தெரிந்தும், அதனைப் பயன்படுத்தி ஆபத்தின் மத்தியில் தொழில் செய்து நஷ்டம் அடைய வேண்டும் என்று தமிழ் விவசாயிக்கு மற்றொரு நிர்ப்பந்தமா?

வெளிநாட்டில் இருந்து நல்ல ரக விதை கிழங்கை இறக்குமதி செய்து கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லை. தமிழ் விவசாயிகளுக்கு உதவவேண்டும் என்ற கரிசனையும் இல்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது.

ஆகையால் யாழ் விவசாயிகள் தமது அமைப்புக்கள் மூலம் நல்லரக விதை கிழங்குகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும்.

### நயினாதீவு இருளில்

வேலணை, ஆக. 15

நயினாதீவில் தற்பொழுது ஜெனரேட்டர் பழுதடைந்த நிலையில் உள்ளதால் நயினாதீவு மக்கள் சில மாதங்களாக இருளிலே மூழ்கியுள்ளனர்.

### பெற்றோர் கவலை

மண்டைதீவு, ஆக. 15

மண்டைதீவு மகா வித்தியாலய கனிஷ்ட பிரிவு கட்டட வேலைகள் ஆரம்பமாகி பல மாதங்கள் ஆகியும் முடிவடையாமல் இருப்பது குறித்து பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். (இ-88)

### வெளியேற வேண்டாம் எனக் கோரிக்கை

கல்முனை, ஆக 15

கல்முனையில் சென்கார்மேல் மகளிர் கல்லூரி, பாத்திமா கல்லூரி ஆகியவற்றில் தங்கியுள்ள தமிழ் அகதிகளை முகாம்களை விட்டு வெளியேற வேண்டாம் என்று பொலிஸ், இராணுவ அதிகாரிகள் நேற்றுக் கேட்டுக்கொண்டனர்.

முகாம்களுக்கு விஜயம் செய்தபோதே அவர்கள் இக்கோரிக்கையை விடுத்தனர். (இ-எ-84)

# ராஜீவ் விமானத்தின் கோளாறு பற்றி ஆராயக் கமிஷன்

புதுடில்லி, ஆக. 14

இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி பயணம் செய்த விசேஷ விமானத்தில் ஏற்பட்ட கோளாறு பற்றி ஆராய்வதற்காக உயர்மட்ட விசாரணை ஒன்றிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் செக்கோஸ்லாவிய தலைநகரிலிருந்து இந்தியா திரும்புவதற்கு பிரதமர் ராஜீவ் காந்தி பயணம் செய்த விமானம் பழுது ஏற்பட்டு மாஸ்கோவிற்கு அனுப்பட்டிருந்தது.

அதற்கு எனக்குறைவு காரணமா அல்லது யந்திரக் கோளாறு காரணமா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிட்ட போக்குவரத்து அமைச்சர் திருமதி மோஹினா கித்வாய் அறிவித்தார்.

கமிட்டி பத்து தினங்களில் தனது அறிக்கையைச் சமர்ப்பிக்கும். விமானத்துறை நிபுணர்கள் பலர் விசாரணைக் கமிட்டியில் அங்கம் பெறுவர். (ஒ)

### பெனாஸிர் கைது

இஸ்லாமாபாத், ஆக 14

பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவி செல்வி பெனாஸிர் பூட்டோ கராச்சி விமான நிலையத்தில் வைத்து கைதானார்.

லாகூர் பகுதியில் நடைபெறும் ஊர்வலம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக அவர் விமானம் ஏறுவதற்கு கராச்சி வந்திருந்தார். (ஒ)

### பேர்லின் சுவரை தகர்க்க வேண்டும் என்கிறார் றேகன்

வாஷிங்டன், ஆக 14

கிழக்கு பேர்லினையும் மேற்கு பேர்லினையும் பிரிக்கும் சுவரைத் தகர்த்துவிட வேண்டும்.

இவ்வாறு ரஷ்ய ஜனாதிபதி கோர்பச்சேவ்வுடன் நடத்தவிருக்கும் உச்சிமாநாட்டில் கேட்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி றேகன் தெரிவித்தார்.

1961 ஆம் ஆண்டு கிழக்கு ஜெர்மனி பேர்லின் நகரைப் பிரிக்கும் மூபதியில் முள்ளுக்கம்பி வேலி போட்ட போது, மேற்கத்திய நாட்டுப் படைகள் அதனை நிர்மூலமாக்கியிருந்தால் சுவர் நிர்மாணிக்கபட்டிருக்க முடியாது என்றும் றேகன் கூறினார்.

கிழக்கு பேர்லினில் இருந்து மக்கள் மேற்கு பேர்லினுக்குள் செல்வதைத் தடுப்பதற்காகவே இந்தச்சுவர் என்று எழுப்பட்டிருந்தது. அது தொடர்ந்து இன்று இருந்து வருகிறது. (இ-ஒ)

### சீனாவில் பெருமழை

பீகிங், ஆக 14

கடந்த சில தினங்களாகப் பெய்த பெருமழை தென் சீனாவின் விவசாய நிலங்களைப் பாதித்துள்ளது.

இதனால் 65 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் முற்றாக அழிந்தன.

இன்னும் அடுத்த மாதம் நெல் அறுவடை நடைபெற இருந்தது. (இ-ஒ)

### இந்தோனேஷியாவில் இராணுவ ஆதிக்கம் நிறுத்தப்படக் கோரிக்கை

ஜகார்த்தா, ஆக 14

இந்தோனேஷிய அரசாங்கத்தில் அந்நாட்டு இராணுவம் முக்கியபங்கு வகிப்பது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு இந்தோனேஷிய அரசிற்கு எதிரான முக்கிய பிரமுகரான அலி சடிகின் தெரிவித்தார்.

ஜனாதிபதி சுகார்டோவின் 20 ஆண்டுகால ஆட்சியைப் பகிரங்கமாக எதிர்த்து வரும் இவர் தலைமையில் ஜகார்த்தாவில் ஆட்சேப ஊர்வலம் நேற்று நடத்தப்பட்டது.

இந்தோனேஷிய நாடாளுமன்றத்தில் 460 ஆசனங்களில் 160 ஆசனங்கள் போட்டியின்றி ஆயுதபடை அதிகாரிகளால் நியமனம் பெறுகின்றன.

ஏனையோரில் அதிக மானவர்கள் இளைப்பாறிய இராணுவ அதிகாரிகளும் ஆயுதப்படையைச் சேர்ந்தவர்களுமே.

இந்தநிலைமாறி ஜனநாயக முறைப்படி மக்கள் பிரதிநிதிகளாக வேண்டும்.

இவ்வாறு அவர்மேலும் தெரிவித்தார். (இ-ஒ)

### கொரியா விடுதலை தினம்

சோல், ஆக. 14

ஜப்பானின்முடியாட்சி ஆக்கிரமிப்பிலிருந்து 1945 ஆம் ஆண்டு கொரியா விடுதலை பெற்றதைக் குறிக்கும் வருடாந்த கொண்டாட்டங்கள் இன்று கொரியாவில் கோலாகலமாக நடைபெறும்.

இதனை முன்னிட்டு அரசியல் கைதிகள் உட்பட 885 கைதிகள் விடுவிக்கப்படவுள்ளனர்.

தென் கொரியாவின் எதிர்கட்சியைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கும் இதனால் வாபஸ் பெறப்படும். (இ-ஒ)

## வெளி உலகில்

### சுரங்கத்திற்கு அனுமதி வேண்டும்

புதுடில்லி, ஆக. 14

சட்டவிரோதமான முறையில் சுரங்கங்கள் வெட்டுவது கடும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

இந்திய நாடாளுமன்றத்தில் எஃகு சுரங்க அமைச்சர் நேற்று இதனைத் தெரிவித்தார்.

கனிவளங்களை விஞ்ஞான ரீதியில் கண்டறிந்து உற்பத்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறு அவர் சொன்னார் (ஒ)

### செயற்கை மழை

சென்னை, ஆக 14

சென்னையில் செயற்கை மழை தோற்றுவிக்கும் முயற்சிகள் இன்னம் இருவார காலத்தில் ஆரம்பமாகும்.

செயற்கை மழையை ஏற்படுத்துவதற்காக இரசாயனப் பொருள்களை மேகங்களுக்கிடையே தூவும் விமானம் தற்போது பெங்களூரில் பழுதுபார்க்கப் பட்டு வருகிறது. இன்னும் இருவாரங்களில் அது சென்னைக்கு வந்துவிடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஒ)

### தடை நீடிக்க வாக்களிப்பு

வாஷிங்டன் ஆக 14

ஏவுகணைகளை எதிர்த்துத் தாக்கும் ஆயுதங்களை பரீட்சிப்பது மீதான தற்போதைய தடை நீடிக்கப்பட வேண்டும்

அமெரிக்க காங்கிரஸில் பெரும்பான்மையாகவுள்ள ஜனநாயக கட்சி உறுப்பினர்கள் இப்படி வாக்களித்துள்ளார்கள்.

ஜனாதிபதி றேகனின் ஆயுத கட்டுப்பாட்டுக் கொள்கைகளுக்கு இவர்கள் தொடர்ந்து தமது எதிர்ப்பைக் காட்டி உள்ளனர் (இ-ஒ)

### ஜனாதிபதி விவாகரத்து

ருனிஸ், ஆக. 14

ருனிஷியா ஜனாதிபதி தமது நாலாவது மனைவியையும் விவாகரத்துச் செய்துள்ளார்.

### பிரான்ஸில் டெலிவிஷன் சேவை தனியாரிடம்

பாரிஸ் ஆக 14

பிரான்ஸின் வலது சாரி அரசாங்கம் தொலைக் காட்சி சேவையை தனியார் மயப்படுத்தும் தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த சட்டமூலம் நிறைவேறியுள்ளது

ஆறுவார காலம் இதற்தாக நடைபெற்ற விவாதம் நேற்று நிறைவேற்றப்பட்டது

இதனால் பிரான்ஸிலுள்ள அரசுக்குச் சொந்தமான பல தொலைக் காட்சி சேவைகளில் முதலாவது சேவை தனியார் முதலீட்டாளர் வசம் இன்று கையளிக்கப்படும்

பிரான்ஸின் இடதுசாரிகள் அரசாங்கத்தின் இந்த தீர்மானத்தை கடுமையாக எதிர்த்து ஆட்சேபம் தெரிவித்துள்ளார்கள் (இ-ஒ)

# சண்முகனை சரண் அடையின் சந்தவினை ஓடிவிடும்

கலியுக வரதனும் கந்தனே கண் கண்ட தெய்வம் என்று நம்பும் கந்தனின் நல்விழாப் பொலிவு கண்டு ஆர்த்தல் சைவமக்களின் வரப்பிரசாதமாகும். மகோற்சவ நாள்களில் மக்கள் கூட்டம் நிரம்பி வழியும்.

**நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்**

ஆலய சுற்றுடல் புனிமாக இருக்கும்.

சண்முகப் பெருமானை சரணடைந்தால் சந்த வினையும் பந்த வினையும் பறந்தோடிவிடும். ஆகவே தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தனை வழிபட்டு நற்கதி பெற்றுய்வோமாக.

செந்தமிழ், பைந்தமிழ், தீந்தமிழ், இன்தமிழ், வண்டமிழ் என்றெல்லாம் புகழ்ந்து பேசப்படும் இனிமையான மொழி தமிழ் மொழியாகும். அந்தத் தமிழ் மொழி போல இனிமை தரும் மொழி வேறில்லை.

அதே போல் முருகன், குமரன், சரவணன், சண்முகன், கந்தன், வேலன் என்றெல்லாம் அழைக்கப்பெறும் ஆறுமுகப் பெருமானைப்போல அருள் புரியும் தமிழ்க் கடவுள் வேறில்லை எனலாம்.

தமிழே முருகன் முருகனே தமிழ்.

முருகனுக்குப் பல பெயர்கள் உள்ளன. அவைகளில் 'முருகன்' என்னும் பெயருக்கு மிகுந்த பெருமையுண்டு என்று நூல்கள் பகர்கின்றன, 'முருகு — அன்' முருகு என்றால் இளமை, அழகு, மணம், கடவுள் தன்மை எனப் பொருள். 'அன்' ஆண்பால் விகுதி. "முருகு" என்ற பதம் வல்லினம், மெல்லினம் இடையினம் ஆகிய மூன்றும் சேர்ந்த உயிர் மெய்யெழுத்துக்களால் ஆனது. அந்த உயிர்மெய்யெழுத்துக்களில் உள்ள மெய்யெழுத்துக்களை அதாவது ம்—ர்—க்; ஆகியவற்றை நீக்கிவிட்டுப் பார்ப்போமானால் மூன்று உகரங்களே மிஞ்சி அவை அடைத்தச். உ—காத்தல், ம—அழித்தல். இம்மூன்றும் சேர்ந்தே 'ஓம்'' என்ற ஓங்காரமான பிரணவ

### நிதர்ஸன்

மாகின்றது. இம்மூன்றின் இடையிலேயுள்ள உகரம் காத்தற்றொழிலைக் குறிக்கும் மற்றப் பெயர்களில் இத்தன்மை கிடையாது.

முருகனுக்கும் தமிழுக்கும் ஒற்றுமைகள் பலவுண்டு. தமிழ் எழுத்துக்களில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு ஆறுமுகனுக்குக் கரங்கள் பன்னிரண்டு. உயிர்மெய் எழுத்துக்கள் பதினெட்டு. கந்தனுக்கு கண்கள் பதினெட்டு. ஒரு முகத்தில் நெற்றிக் கண்ணுடன் மூன்று கண்களாக ஆறு முகத்திலும் 6 × 3 = 18; என வருகின்றது. எந்த மொழிக்கும் இல்லாத தனிப்பெருமைவாய்ந்தது ஃ என்னும் ஆய்த எழுத்து. அதேபோல எந்தக் கடவுளுக்கும் இல்லாத தனித்துவம் வாய்ந்த வேலாயுதம்



முருகக் கடவுளிடம் உண்டு. அறிவு ஆழ்ந்திருக்க வேண்டும் அறிவு ஆழமாய் இருக்க வேண்டும். அறிவு கூர்மையாயிருக்க வேண்டும். முருகனின் வேலாயுதமும் ஆழ்ந்து அகன்று கூர்மை யாகிருக்கின்றது.

'வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே'' என்பது மணிவாசகர் கூற்று. இது இவண் நோக்கற்பாலது. ஆகவே அறிவுச் சுடராகத் திகழ்பவன் ஆறுமுகன்.

சரவணப் பொய்கையில் தோன்றியமையால் சரவணபவன் எனவும் உமையம்மையால் அணைக்கப்பட்டு ஒருருவான தன்மையினால் கந்தன் எனவும் ஆறுமுகங்களோடு காட்சி தருவதால் ஆறுமுகன் எனவும் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பெற்றமையால் கார்த்திகேயன் எனவும் மன்மதனைப் பொடியாக்கிய பின்பு தோன்றியவனதனால் குமரன் எனவும் பல்வேறு திருநாமங்களால் முருகன் அழைக்கப்படுகின்றான்.

முருகன் அருவமும் உருவமும் இல்லாதவன். மயில் அவருடைய வாகனம். சேவல் அவருடைய கொடி. மயில் தோகையை விரித்து 'ஓம்' என்ற பிரணவ வடிவத்தைக் காட்டி அழகுற ஆடுகின்றது சேவலானது 'கொக்கரக்கோ' என்று கூவுகின்றது. கொக்கு என்றால் மாமரம் எனவும் பொருள்படும். அறு என்றால் வெட்டிய, கோ என்றால் தலைவன். ஆகவே மாமரமாய் நின்ற சூரனைச் சங்கரித்த தலைவனே என்கின்றது சேவல். எனவே மயில் விந்து சேவல் நாதம். விந்துவடிவமான மயில் உருவம் நாதவடிவான சேவல் அருவம். இந்த இரண்டுக்கும் இடையில் இருக்கின்றார் முருகன் 'நாத விந்து கலாதி மோநம' என்பது திருப்புகழ்.

எழுத்துவடிவு என்றும் உள்ளது. ஒலிவடிவானது உடனே மறைந்துவிடும் ஆகவே மயில் இருண்ட மேகத்தைக் கண்டு மகிழ்ச்சி கொள்ளும். அதனால் அது இருள். சேவலோ உதயனைக் கண்டுமகிழ்ச்சி கொள்ளும். அதனால் அது ஒளி. 'உருவன்றருவன்றுளதன்றிலதன்றிருளன்றொளியன்றென நின்றதுவே' என்பது கந்தரனுபூதி.

முருகன் என்றும் உள்ளவன். சிவனும் அவனுக்கும் பேதமில்லை. 'ஆதியின் நமது சக்தி அறுமுகன்' இது கச்சியப்பர் கூற்று. சூரனைச் சங்கரிப்பதற்காக வந்து உதித்தவன்.

''அருவமும் உருவுமாகி
அநாதியாய்ப்
பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர்
மேனியாகிக்
கருணைகூர் முகங்களாறும்

கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒரு திரு முருகன்
வந்தாங்கு உதித்தனன்
உலகமுய்ய''

என்பது கந்தபுராணப் பாடல்.

தமிழ்ஞான உருவங்கொண்டு தண்டபாணியாக விளங்கும் தணிகாசலனாகிய முருகன் தமிழ் மக்கள் துயர் தீர்க்கத் திருவருள் புரிய வேண்டும். ஆகவே அவனடி பணிந்து அவன் புகழ் பாடி வாழ்த்த வாயும் நினைக்க நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது எமது தலையாய கடனாகும். அவ்வண்ணம் முருகனைச் சிந்தித்து நின்று சேவித்து அவனை வந்தித்து துன்பங்களைய வரவேண்டும் என்று, 'அவனருளாலே அவன் றாள் வணங்கி' என்று மணிவாசகர் கூறியது போல அவனே கதியென்று நின்று முருகன் கமல மலர்ப்பாதங்களைக் கைதொழுது நிற்போமாக.

**பொய்யாமொழி**



குறள்:

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

பொருள்:

வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாக வாழவேண்டும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமானது வேறொன்றும் இல்லை.

# ஈசன் எங்கே?

## அருளுரையில் விளக்கம்

யாழ்ப்பாணம்ஆக, 15

ஆத்மஜோதி நா. முத்தையா நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில் ஈசன் எங்கே? என்ற தலைப்பில் அருளுரை நிகழ்த்தினார்.

கடவுள் இருக்கும் இடத்தைக் காட்டினால் ஒரு மாம்பழம் தருவேன் என்றான் ஒரு சிறுவன்.

கடவுள் இல்லாத இடத்தைக் காட்டினால் இரண்டு மாம்பழங்கள் தருவேன் என்றான் மற்றவன்.

அன்று தொடக்கம் இன்று வரை, இனிமேலும் தொடரப்போவது இந்தப் பிரச்சினை.

மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா என்பது போல கடவுள் இல்லை என்பவர்களும் தங்களுக்கேற்ற நியாயத்தை மூடி வைத்து இருக்கின்றார்கள்.

கடவுள் எங்கே இருக்கிறார்? அப்படி இருந்தால் இதுவரை வெளியில் வராமலா இருப்பார் என்று பேசுகிறார்கள்.

இது மிகப்படித்த அறிவாளிகள் என்பாரில் சிலர் பேசுகிற பேச்சு.

இதற்கு கம்பர் மறுமொழி கூறியிருக்கிறார். கடவுள் திருவிளையாடல் பெரிய மாயையாகவுள்ளது என்று கம்பர் கூறியதை நினைவில் கொள்ள வேண்டும்.

இப்படி ஆத்மஜோதி முத்தையா சொன்னார். (இ-எ)

**சமய சந்நிதிகளில்**

### சாவகச்சேரியில்

சாவகச்சேரி, ஆக.15

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீதுர்க்கையம்பாள் ஆலயத்தில் வரலக்ஷ்மி விரதவிழா இன்று 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இன்று பிற்பகல் ஸ்ரீ துர்க்கை அம்பாளுக்கு விசேஷ பூசையும் வசந்த மண்டபத்தில் பஞ்சமுகவார்ச்சனையும் அதைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலாக்காட்சியும் இடம் பெறவிருக்கின்றன.

சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் விழா நடைபெறும். (இ-31)

### பால் மா இல்லை

மண்டைதீவு, ஆக. 15

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் மண்டைதீவு உப அலுவலகத்திற்குப்பட்ட குழந்தைகளுக்கு பால் மா விநியோகிப்பதற்கு பணம் ஒதுக்கியும் இன்று வரை பால் மா விநியோக நடவடிக்கை எடுக்காதது குறித்து இப்பகுதி தாய்மார்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயமாக அக்கறை கொள்ளாது இருப்பது குறித்து கண்டனம் தெரிவிக்கப்படுகின்றது. (இ-88)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Wyman English Language INSTITUTE**
**SPOKEN ENGLISH**
WITH GRAMMAR
for G.C.E. O/L Dec. '86
ஆரம்பம்:
நாளாந்த வகுப்புகள்: 18-8-86 மாலை 4—5
வார இறுதி: 18-8-86 மாலை 3—5
S. B. Iyar 12, வைமன் வீதி

# உதயன்

15-08-1986 வெள்ளிக்கிழமை

**WYMAN ENGLISH LANGUAGE INSTITUTE**
**SPOKEN ENGLISH**
WITH GRAMMAR
for G.C.E. O/L Dec. '86
ஆரம்பம்:
நாளாந்த வகுப்புகள்: 18-8-86 மாலை 4—5
வார இறுதி: 16-8-86 மாலை 3—5
S. B. Iyar 12, வைமன் வீதி.

# பம்பாய் வெங்காயம்:
# கிலோ 9 ரூபாவுக்கு கொள்வனவு

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ் மாவட்டத்தில் உற்பத்தியாளர்களிடம் இருந்து பம்பாய் வெங்காயத்தை கிலோ ஒன்பது ரூபா வீதம் கொள்வனவு செய்யும்படி சகல கூட்டுறவுச் சங்கங்களும் பணிக்கப்பட்டுள்ளன.

பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. நா. குகராசாவின் வேண்டுகோளைத் தொடர்ந்து யாழ் அரச அதிபர் திரு. பஞ்சலிங்கம், உதவி விவசாயப்பணிப்பாளர் திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை எடுத்த அயராத முயற்சி காரணமாகவே இவ் விலை நிர்ணயம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த புதன்கிழமை யாழ் கூட்டுறவுத் திணைக்களத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் கொள்வனவு விலை நிர்ணயிக்கப்பட்டது.

உற்பத்தியாளர்களின் நலன் கருதி கொள்வனவு விலை நிர்ணயிக்கப்படவேண்டும் என்று உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு. குகராசா கூட்டத்தில் தெரிவித்தார்.

கூட்டத்துக்கு கூட்டுறவு அபிவிருத்தி சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. சண்முகலிங்கம் தலைமை வகித்தார். (உ-எ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஆக. 15

ஆத்மஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா எழுதிய "இந்தோனேசியாவில் இரண்டு வருட அனுபவங்கள்" என்ற நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிறு (17-8-86) பிற்பகல் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நல்லை ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் தலைமை வகிப்பார்.

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) நூலை வெளியிட்டு வைக்கிறார். முதல் பிரதியை தொழில் அதிபர் திரு. க. கனகராசா பெற்றுக் கொள்வார்.

வித்துவான் சி. குமாரசுவாமி, திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் ஆகியோர் ஆசியுரை வழங்குவர். (உ-எ)

# 61 வீத கடல் பகுதியை சிங்களவர் இழப்பதா?

## சிறிமாவோ கேட்கிறார்

கொழும்பு, ஆக. 15

புத்தளத்தில் இருந்து கிழக்கிலங்கை வரையான 61 சதவீதக் கடல்பகுதி வடக்கு, கிழக்கு மாகாண சபைகளுக்குச் சென்றால் சிங்கள இனத்தின் கதி என்னவது?

வாரியப்பொலவில் நடந்த மாகாண சபை எதிர்ப்புக் கூட்டத்தில் பேசுகையில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு கேட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

சிங்கள இனம் அழிவின் விளிம்பில் நிற்கிறது.

ஒரு சிங்களவனுவது யாழ்ப்பாணம் சென்று தப்பிவர முடியாது.

ஆனல் வடபகுதியைச் சேர்ந்த பலர் எம்மத்தியில் நிம்மதியாக வாழ முடிகின்றது.

பொலீசுக்கு ஆள்திரட்ட மாகாணசபை முதலமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இது திராவிடர்களின் கைகளை ஓங்கவே செய்யும்.

—இப்படி அவர் சொன்னர்.

முன்னுள் நீதியரசர் ஜெயபதிரான, முன்னுள் சபாநாயகர் ஸ்டான்லி திலகரத்தின, எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா உட்படப் பலர் பேசினர். (உ-எ)

# சரக்குப்பெட்டிக்குள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கணக்காளராக இருந்தேன். ஜூனில் போராளிகளுக்கும் இலங்கை கடற்படைகளுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றது. அப்போது ஹோட்டல் எரிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து இலங்கைக்கு மீன்பிடி வள்ளம் ஒன்றில் கள்ளத்தனமாகப் போய்ச் சேர்ந்தேன்.

அங்கு தரகர் ஒருவரைச் சந்தித்தேன். கனடாவுக்குப் போகும் வாய்ப்புப்பற்றி அவர் தெரிவித்தார். விருப்பமா என்று என்னைக் கேட்டார். நான் சம்மதித்தேன்.

கடந்த மாதம் 6ஆம் திகதி கரைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். கப்பலினுள் பலரைச் சந்தித்தேன். சரக்குகள் வைக்கப்படும் பகுதிக்குள் எம்மை இருக்கும்படி கூறி எதனையும் பார்க்க முடியாதவாறு டோர் போவினுல் மூடிவிட்டார்கள்.

கப்பல் பயணத்தின் போது சோறும் தண்ணீரும்தான் கிடைத்தது.

இரண்டு சிறு படகுகளில் எம்மை இறக்கும் போது அருகில்தான் கனடா இருப்பதாகக் கூறப்பட்டது.

படகுகளில் தண்ணீர் மட்டும்தான் இருந்தது. கொம்பாஸ் அப்படகுகளில் இருக்கவில்லை.

படகுகள் ஐந்து தினங்களுக்கு மேலாக கடலில் தத்தளித்தன. நாம் மிகவும் பயந்துபோய் இருந்தோம். நாம் இறந்துவிடுவோம் என்று நினைத்துக்கொண்டோம்.

இப்படி அவர் சொன்னர். (உ-எ)

## வர்த்தகர்களில் ஒருவர் விடுவிக்கப்பட்டார்

மட்டக்களப்பு, ஆக. 15

செங்கலடியில் கடத்தப்பட்டு விடுவிக்கப்படாமல் இருந்த இரண்டு வர்த்தகர்களில் ஒருவர் நேற்றுக்காலை விடுவிக்கப்பட்டார்.

அவரின் பெயர் பாலசுப்பிரமணியம். பாலா குறூப் உரிமையாளர். மல்லாகம் வாசி.

காரைநகர் வாசியான மகாலட்சுமி ஸ்டோர்ஸ் உரிமையாளர் கே. நாகேந்திரம் இன்னும் விடுவிக்கப்படவில்லை. (இ-எ-21)

## வான் கடத்தியவருக்கு வான் மேல் தண்டனை!

யாழ்ப்பாணம் ஆக. 15

இயக்கம் ஒன்றின் பெயரைச் சொல்லி வான் கடத்திய ஒருவர் அந்த வானின் மேலே ஏற்றப்பட்டு மக்களின் காட்சிப்பொருளாகக் கொண்டு செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் அச்சுவேலிப்பகுதியில் நடைபெற்றது.

சம்பந்தப்பட்டவர் ஓர் இயக்கத்தின் உறுப்பினர் என தன்னைக் கூறிக்கொண்டு நீர்வேலியில் செவ்வாய்க்கிழமையன்று ஒரு வானைக் கடத்தினுராம்.

குறிப்பிட்ட அந்த இயக்கத்தவர்களுக்கு தகவல் கிடைத்ததையடுத்து அவர்கள் சம்பந்தப்பட்டவரைத் தேடி வலைவிரித்தனர்.

அவர் இயக்க உறுப்பினர்களிடம் அடுத்தநாள் வகையாக சிக்கிக்கொண்டார்.

சம்பந்தப்பட்ட நபர் அதே வானில் ஏற்றப்பட்டார். கழுத்தில் இரு அட்டைகளைக் கட்டி கடத்தியவர் மக்களுக்கு தன்னை தானே அறிமுகம் செய்வித்தபடி ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டாராம். (உ-5-119)

## ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஆக. 15

புத்தூர் ஸ்ரீ குமரகுருபரன் விளையாட்டுக் கழகத்தினரின் ஆண்டு விழா நிகழ்ச்சிகள் நாளை 16ஆம் 17ஆம் திகதிகளில் நடைபெறும்.

16ஆம் திகதி கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டிகளும் 17ஆம் திகதி கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (இ-5)

## உண்ணுவிரதம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தே உண்ணுவிரதம் கைவிடப்பட்டது.

ராகிங் சம்பந்தமான பிரச்சினைகளை புதிய நடவடிக்கைக்குழுவையாளும் அதே வேளையில், மாணவர் அவை தனது பணிகளை தொடர்ந்து ஆற்றும் எனவும் அமைப்புக் குழு தெரிவித்தது. (உ-5)

## அரசிடம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு அமிர்தலிங்கம் சொன்னர்.

கூட்டணித் தூதுக்குழுவில் இடம் பெறுவோரின் பெயர் விபரம் வருமாறு:

திரு அ. அமிர்தலிங்கம்.

திரு. எம் சிவசிதம்பரம்.

திரு. இரா. சம்பந்தன்.

திரு வெ. யோகேஸ்வரன்.

திரு. வி. ஆனந்தசங்கரி.

திரு அ. தங்கத்துரை

திரு அல்பேர்ட் மேரி.

பேச்சுக்களின் போது கொழும்பில் உள்ள கூட்டணிப் பிரமுகர்களும் கிழக்கு மாகாண கூட்டணிப் பிரமுகர்களும் கலந்து கொள்வர். (அ-எ)

### 3 நாட்களுக்கு மேல் கிடந்த

# மூன்று சடலங்களும் பிரேத பரிசோதனை

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ் பெரியாஸ்பத்திரி பிரேத அறையில் மூன்று நாட்களுக்கு மேலாகக் கிடந்த சடலங்கள் நேற்று பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

மூன்று சடலங்களையும் உதவி சட்ட வைத்திய அதிகாரி சி. கே. ரிமேலழகர் பிரேத பரிசோதனை நடத்தினுர்.

இதே வேளை சின்னக்கடைப் பகுதியில் மரணமான வயோதிபர் முத்துச்சாமியின் சடலம் உறவினர்கள் இல்லாதபடியால் அரச செலவில் அடக்கம் செய்யப்படும்.

யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் உள்ள ஆறு குளிர்சாதனப் பெட்டிகளும் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இயங்க முடியாத நிலையில் உள்ளன. இதன் காரணமாகவே சடலங்கள் துர்நாற்றம் வீசத் தொடங்குகின்றன.

மேலும் யாழ். ஆஸ்பத்திரிக்கு என நிரந்தர சட்ட வைத்திய அதிகாரி இல்லாதிருப்பதும் பெரும் குறைபாடாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (இ-10)

## மிகிந்தலையில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ந்தபோது ஆயுதந் தாங்கிய கோஷ்டியினர் லொறியை வழிமறித்தனர்.

அவர்கள் சாரதி, கிளீனர் ஆகியோருடன் ஏஜன்சி உரிமையாளரின் மகனையும் சேர்த்து லொறியுடன் எரித்தனர்.

பொலீஸார் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவுக்கும் முறையீடு செய்யப்பட்டுள்ளது.

லொறியில் எரிந்து பலியானேர் பெயர் விபரம் வருமாறு:—

பெரியசாமி (30 வயது) சாரதி, கொழும்பன் (35 வயது) கிளீனர், செந்தில் (24 வயது) போக்குவரத்து ஏஜன்சி உரிமையாளரின் மகன். (இ-10)

## பகிஷ்கரிப்பு தொடரும்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் தொடர்புடையவர், எந்தவோர் சரியான விசாரணையும் மேற்கொள்ளப்படாமல் எமது மாணவர் தண்டிக்கப்பட்டதைக் கண்டித்தே நாம் எமது நியாயமான போராட்டத்தை மேற்கொண்டோம். ஆனல் எமது கோரிக்கைகளை சரியாக விளங்கிக் கொள்ளாமலும் அதன் நியாயத்தன்மையைப் புரிந்து கொள்ளாமலும் சில கோஷ்டிகளால் வெளியிடப்பட்ட உண்மைக்குப் புறம்பான கருத்துக்களை நாம் மறுக்கிறேம் வன்மையாகக் கண்டிக்கிறேம்.

எம்மால் முன் வைக்கப்பட்ட நியாயமான கோரிக்கைகளுக்காக போராட்டத்தை ஆதரித்து ஜனநாயக சக்திகளும் ஆதரித்தன என்பதில் எதுவித ஐயமுமில்லை.

எமது இந்த வெகுஜனப் போராட்டம் இன்று எமது கோரிக்கைகள் தொடர்பாக நிர்வாகம் தந்திருக்கும் உத்தரவாதத்தைத் தொடர்ந்து வெற்றிபெற்றுள்ளது.

எம்மால் நிர்வாகத்திடம் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளின் பெரும்பாலானவை ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் ஒரு சில கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அனுசரணையாக தாளமுதல் நிர்வாகம் தொடர்பான மறியல் போராட்டத்தைத் தற்காலிகமாக இடை நிறுத்தும் அதே வேளையில் குறிப்பிட்ட கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதன் மூலம் போராட்டத்தைத் தொடரவும் முடிவாகியுள்ளது (உ)

## வங்களாவடியில் மின் மாற்றி வெடித்தது

வேலணை ஆக 15

வேலணை வங்களாவடி சந்தியிலுள்ள மின் மாற்றி கடந்த புதன்கிழமை அதிகாலை பாரிய சத்தத்துடன் வெடித்தது.

இதனுல் இந்தமின்மாற்றியிலுள்ள சில பகுதிகள் முற்றாக எரிந்து விட்டன.

வேலணைப் பகுதிக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

இது சட்ட விரோத மின்பாவனையாளர்களினுலேற்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியிலும் இதே போன்று மின் மாற்றி வெடித்தமை தெரிந்ததே. (இ)

## நிலஉரிமை பிரச்சினைபற்றி கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 15

வடமராட்சிப் பகுதியில் மண்டான் என்ற கிராமத்தில் ஏற்பட்டுள்ள நில உரிமை சம்பந்தமான பிரச்சினை பற்றி ஆராயும் பொதுக்கூட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை மண்டானில் மாவலி படிப்பகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சியில் உள்ள நிலப் பறிப்புக்கு எதிரான போராட்டக் குழு இக்கூட்டத்துக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. (உ-எ)

நிக்கார் பிரமுகர் 60

## திருமதி நாகமுத்து நல்லதம்பி

புங்குடுதீவு 10ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நாகமுத்து நல்லதம்பி 13-8-86 அன்று காலமானுர். இவர் காலஞ்சென்ற நல்லதம்பியின் அருமை மனைவியும், சங்கரலிங்கம் செல்லத்துரை (உரிமையாளர் கமலா ஸ்ரோர்ஸ், கவுரி பொறேச் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), திருமதி கமலாம்பிகை நல்லதம்பி (உரிமையாளர் நல்லதம்பி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், சத்தியவதி, பரமேஸ்வரி, காலஞ்சென்ற நல்லதம்பி ஆகியோரின் அன்பு மாமியாரும் பாரதிதாசன், (U.K.), பத்மதாசன், (U,K.,) பாஸ்கரதாசன், திருமதி கண்ணகிதேவி, கணேசரட்ணம் திருமதி கலாதேவி, அரியராசா, (ஜேர்மனி), கமலதாசன், கண்ணதாசன், கமலாதேவி, கௌரிதேவி, திருமதி பஞ்சவாதேவி, புஷ்பராசன், (ஜேர்மனி) சந்திரகுமார், சிவகுமார், (ஜேர்மனி) சியாமளாதேவி, சோமளாதேவி, ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னரது தகனக் கிரியைகள் 15-8-86 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு புங்குடுதீவு மணற்காட்டு மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றர் உறவினர் நண்பர்கள், ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ந. செல்லத்துரை

# விளையாட்டரங்கு

# சிறப்பாக நடைபெற்ற ரேட்டரி விளையாட்டுகள்

யாழ்ப்பாணம், ஆக. 15

யாழ் மாவட்ட ரேட்டரிக்கழகம் இவ்வாண்டு நடத்திய உதைபந்தாட்டம், வலைப்பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள் மிகச்சிறப்பாக நடைபெற்று முடிவடைந்திருக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் முதல் இப்போட்டிகள் அடுத்தடுத்து நடைபெற்றன.

ஒவ்வொரு விளையாட்டுகளுக்குமுரிய போட்டிகள் அந்த விளையாட்டுகளுக்குரிய மாவட்ட சம்மேளனங்களின் அனுசரணையுடன் நடத்தப்பட்டன.

### உதைபந்தாட்டம்

ஏழுபேர் அடங்கிய அணிகளுக் கிடையிலான உதை பந்தாட்டப் போட்டியில் பதினறு அணிகள் பங்குபற்றின. இப்போட்டியில் "பொற்பதி" விளையாட்டுக் கழகம் சாம்பியன்களுக்குரிய கேடயத்தையும், சென். நிக்கலஸ் விளையாட்டுக் கழகம் 2-வது இடத்திற்குரிய வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றன.

### வலைப் பந்தாட்டம்

வலை பந்தாட்டக்கேடயத்தை யாழ் திருக்குடும்ப கன்னியர் விளையாட்டுக்கழகம் பெற்றது. அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 2வது இடத்திற்குரிய வெற்றிக்கிண்ணத்தையும் பெற்றது. இருபது அணிகள் பங்குபற்றிய இவ்வலைப் பந்தாட்டப் போட்டிகள் யாழ். பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

### கூடைப்பந்து

கூடைப் பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் 7 அணிகளும் பெண்கள் பிரிவில் 3 அணிகளும் பங்குபற்றின இப்போட்டியில் ஆண்கள் பிரிவில் சென் ஜோன்ஸ் கல்லூரி சாம்பியன்களுக்குரிய வெற்றிக்கேடயத்தையும் வை. எம் சி ஏ அணி 2வது இடத்திற்குரிய வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றன.

பெண்கள் பிரிவில் யாழ். பல்கலைக்கழகம் யாழ் திருக்குடும்ப கன்னியர் விளையாட்டுக்கழகம் 2வது இடத்தையும் பெற்று தமக்குரிய வெற்றிக்கேடயத்தையும் வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்துக் கொண்டன.

### மெய்வல்லுநர் போட்டிகள்

பத்து மெய்வல்லுநர் நிகழ்ச்சிகள் அடங்கிய போட்டியில் ஆண்கள் பிரிவில் முப்பது வீரர்கள் போட்டியிட்டனர்.

இப்போட்டியில் தோமஸ் 3154 புள்ளிகள் பெற்று சாம்பியன் கேடயத்தைத் தட்டிக் கொண்டார்.

பத்து வீராங்கனைகள் பங்குபற்றிய பெண்கள் பிரிவில் செல்வி றஞ்சனி, பொன்னுடோ, 2488 புள்ளிகள் பெற்று சாம்பியன் கேடயத்தைச் சுவீகரித்துக்கொண்டார்.

இப்போட்டிகளுக்குரிய பரிசளிப்பு விழா சென் ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது (உ)

# தமிழ்மொழிப்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கையை வலியுறுத்துகின்றது என்றும் இந்தியாவுக்குக் கூறிவிட்டோம்.

கேள்வி: தமிழ்மொழிப் பிராந்தியக் கோரிக்கை பற்றி வேறு ஏதாவது வழியில் இணக்கம் காணப்படுமா?

அமிர்- அதுபற்றி எமக்குத் தெரியாது, நாம் தமிழ்மொழிப் பிராந்தியக் கோரிக்கையைத்தான் வலியுறுத்துவோம். இணக்கம் காணப்படுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

கேள்வி; அரசு கூட்டணி உடன்படிக்கை கருவாகும் கட்டம் வந்துவிட்டது என்று இலங்கை அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறியது பற்றி என்ன சொல்கிறீர்கள்?

அமிர்; அது முற்றிலும் தவறுனது. அப்படி ஒரு உடன்பாடும் காணப்படவே இல்லை.

கேள்வி: தமிழ் தாயகம்பற்றி தீர்வு காணப்பட்டுவிட்டது என்றும் அதே அமைச்சர்சொல்லியுள்ளாரே!

அமிர்: தமிழர் தாயகம்பற்றி இன்னும் முழுமையாகப் பேசியே முடிக்கவில்லை. பின்னர் எப்படி தீர்வு காணப்பட்டுவிட்டது என்று கூறமுடியும்?

கேள்வி: தமிழ்மொழிப் பிராந்தியக் கோரிக்கைக்கு மாற்றுத் திட்டம் ஒன்றை இலங்கை அரசு சமர்ப்பிக்க இருப்பதாகக் கூறப்படுகின்றதே!

அமிர்; பேச்சுக்கள் தொடங்கிய பின்னர் இது பற்றித் தெரியவரும்.

கேள்வி; இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் எத்தனை நாட்கள் நடக்கும் என்று உத்தேசம்?

அமிர்; தற்போதைக்கு நான்கு தினங்கள் நடக்கலாம் என்று உத்தேசம். (அ-எ)

## தூதுவர்கள் கொழும்பில்

கொழும்பு, ஆக. 15

புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதர் பேர்னுட் திலகரத்தின, சென்னையில் உள்ள இலங்கை பிரதித் தூதவர் திஸ்ஸ ஜயக்கொடி ஆகியோரும் நேற்று இலங்கை வந்தனர்.

அரசு—கூட்டணிப்பேச்சுக்களின் போது இலங்கை அரசுக் குழுவுக்கு உதவவே இவர்கள் கொழும்பு வந்துள்ளனர் என்று தெரிகிறது. (அ-எ-ஐ)

## இதோ ஒரு நற்செய்தி!

உங்கள் உணவில் சுவை சேர்க்கவும்
திடீர் விருந்தினரை வரவேற்று சமாளிக்கவும்

பிக்கிள்ஸ் வகைகள்
* கத்தரி * பாவற்காய்
* இருல் * இறைச்சி

இவைகளோடு அச்சாறும்
மொத்தமாகவும் – சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

வ. வஸ்தியான்பிள்ளை
சுண்டிக்குளி.

—இது ஒரு ஆனைக்கோட்டை புதுவாழ்வு நிலையத் தயாரிப்பு

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 15 — 08 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka
Under Num rbaQJ 60 N 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org